DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 157/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அசோக் |
| Father / Husband Name | பாலசுப்புரமணியம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 20.04.2026

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது மதுராந்தகத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய பூர்வீக முகவரி என்ன என்றால் சின்னநெற்குண்றம் கிராமம், திண்டிவனம் வட்டம். நான் கடந்த 15 ஆண்டுகளாக மதுராந்தகம் செங்குந்தர்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வேர்க்கடலை Export தொழில் செய்துவறுகிறேன். இந்த தொழில் செய்வதற்கு எனக்கு அரசு அனுமதி உள்ளதா என்றால் வெற்றி டிரேடர்ஸ் என்ற பெயரில் அரசு அனுமதியும் GST யும் உள்ளது. இது இல்லாமல் நான் வேறு ஏதாவது பெயரில் தொழில் செய்கிறேனா என்றால் என் மனைவி சாந்தி பெயரில் கவின் EXIM என்ற பெயரில் தொழில் செய்கிறேன். இந்த இரண்டு தொழில்களும் ஒரே முகவரியில் தான் செய்கிறேனா என்றால் இல்லை, வெற்றி டிரேடர்ஸ் எண்.32, மேட்டு தெரு, செங்குந்தர்பேட்டையில் உள்ளது. கவின் EXIM எண்.2/11, சின்னகாலணி ரோடு, மதுராந்தகம் என்ற முகவரியில் உள்ளது.

2. வேர்க்கடலை ஏற்றுமதி தொழில் இல்லாமல் வேறு என்ன தொழில் செய்கிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்கிறேன். எந்த பெயரில் நிதி நிறுவனம் நடத்திவருகிறேன் என்றால் வெற்றி பைனான்ஸ் என்ற பெயரில் நடத்தி வருகிறேன், அதற்கும் அரசு அனுமதி உள்ளது. வெற்றி பைனான்ஸ் எந்த முகவரியில் நடத்துகிறேன் என்றால் எண்.27, உகம்சந்த் சாலை, கவிதா ஸ்டுடியோ காம்ப்ளக்ஸ் உள்ளே உள்ளது. வெற்றி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திற்கு நான் மட்டும் பிரிபரேடர். கவின் EXIM என்பதற்கு என் மனைவி மட்டும் உரிமையாளர். மேலே சொன்னதை தவிர வேறு என்ன தொழில் செய்கிறேன் என்றால் தற்போது நிலம் வாங்கி விற்கும் தொழிலும் மற்றும் நில தரகர் வேலையும் செய்கிறேன். ரியல் எஸ்டேட் செய்வதற்கு அரசு அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை.

3. என்னுடைய மேலே சொன்ன மூன்று தொழில்களுக்கும் தனித்தனியாக வங்கி கணக்கு உள்ளதா என்றால் வெற்றி டிரேடர்ஸ்க்கும், கவின் EXIM க்கும் வங்கி

கணக்கு உள்ளது. நிதி நிறுவனத்திற்கு தனியாக வங்கி கணக்கு இல்லை. நிதி நிறுவனத்திற்கு தனியாக வங்கி கணக்கு இல்லாமலேயே லைசன்ஸ் வழங்கினார்களா என்றால் வங்கி கணக்கு இல்லாமல் தான் லைசன்ஸ் வாங்கினேன். எப்போது வாங்கினேன் என்றால் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினேன், அதன் பின்னர் அந்த நிதி நிறுவனத்தை தொடர்ந்து நடத்தவில்லை. நிதி நிறுவனத்திற்கு யார் லைசன்ஸ் வழங்கியது என்றால் மதுராந்தகம் தாலுக்கா அலுவலகத்தில் வாங்கினேன். லைசன்ஸை சிறப்பு தாசில்தார் தான் வழங்குவார் என்றால் என்னுடைய மேலாளர் தான் லைசன்ஸ் வாங்கினார், அதனால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியவில்லை.

4. லைசன்ஸ் வாங்குவதற்கு வங்கி கணக்கு, என்னுடைய கையிருப்பு ஆகிய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம் சமர்பித்தால் தான் லைசன்ஸ் வழங்குவார்கள் என்றால் நான் வெற்றி டிரேடர்ஸ் கணக்கு பட்டியலை கொடுத்தேன். நான் வெற்றி டிரேடர்ஸ் மற்றும் கவின் EXIM ஆகிய நிறுவனங்களுக்கு தனித்தனியாக பேன் கார்ட் வைத்துள்ளேனா என்றால் என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் பேன் கார்ட் உள்ளது. நான் ஆண்டு தோறும் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு வெற்றி டிரேடர்ஸ் துவங்கினேன், அதில் இருந்து தொடர்ந்து வருமான வரி செலுத்திவருகிறேன். நான் நிறுவனங்கள் அல்லாமல் வேறு வங்கி கணக்கு வைத்துள்ளேனா என்றால் என்னுடைய தனிப்பட்ட வங்கி கணக்கு உள்ளது. அது ICICI மற்றும் KVB மதுராந்தகம் கிளையில் உள்ளது. வேறு எந்த ஊரிலும் நான் வங்கி கணக்கு வைத்திருக்கவில்லை.

5. எதிரியை எனக்கு சுமார் 10 ஆண்டுகளாக தெரியும். எதிரியை எப்படி தெரியும் என்றால் என்னுடைய உறவினரான நடுக்குப்பம் சேகர் என்பவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார், அவர் தான் எதிரியை அறிமுகம் செய்து வைத்தார். எதிரி மரக்காணம் கூட்டுறவு வங்கியில் வேலை செய்வதாக மேற்சொன்ன சேகர் என்பவர் சொன்னார். எதிரி எங்கு வேலை செய்கிறார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு அறிமுகம் ஆன பிறகு எதிரி வேலை செய்யும் அலுவலகத்திற்கு நான் சென்றுள்ளேன். எதிரி தான் எனக்கு முதலில் அறிமுகமான நபர் என்றால் இல்லை, சேகர் என்னுடைய உறவினர் அவர் மூலம் தான் எதிரி அறிமுகம் ஆனார்.

6. எதிரியின் மனைவியை தெரியுமா என்றால் தெரியும், எதிரியும் அவரது மனைவியும் என்னுடைய மில்லுக்கு வந்தார்கள். 2017 ம் ஆண்டு எதிரி முதன்முதலில் என்னிடம் கடன் வாங்கினார். எப்போது வந்தார்கள் என்றால் எதிரியின் மனைவி 2024 ஜனவரியில் வந்தார். 2017 ல் எதிரி என்னிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கினார், அதை 4 மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார், மேற்படி தொகை ரூ.1 லட்சம் லாபமாக சேர்த்து 4 மாதத்தில் திருப்பி கொடுத்துவிட்டார். எந்த தேதி மாதத்தில் கொடுத்தார் என்று சரியாக ஞாபகமில்லை. அப்போது பாண்டும் செக்கும் கொடுத்தார், பணத்தை கொடுத்தவுடன் அதை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். 2017 க்கு பிறகு எதிரிக்கும் எனக்கும் இடையில் பணப்பரிவர்த்தனை எதுவும் இல்லை என்றால் சரியல்ல 2021 ல் ரூ.10 லட்சம் வாங்கினார். தேதி சரியாக ஞாபகமில்லை, என்னுடைய ஆவணங்களை பார்த்தால் வாங்கிய தேதியும், திருப்பி கொடுத்த தேதியும் சொல்லமுடியும்.

7. நான் எதிரிக்கு பணம் கொடுத்தற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியுமா என்றால் அவர் கொடுத்த ஆவணங்களை திருப்பி கொடுத்துவிட்டேன், என்னுடைய வங்கி கணக்கை பார்த்தால் பணம் கொடுத்த தேதியை சொல்லமுடியும். எதிரி கடன் வாங்கும்போது பாண்ட் எழுதிக்கொடுத்தார், நான் கடன் கொடுக்கும்போது ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டுதான் கடன் கொடுப்பேன் என்றால் பாண்டு அல்லது காசோலையை வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பேன். கடன் கொடுக்கும் தேதியிலேயே அந்த ஆவணங்களை வாங்கிக்கொள்வேன் என்றால் சரிதான். எதிரியின் மனைவியும் என்னிடம் கடன் ஏதாவது வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். எதிரியின் மனைவி லதாவிற்க்கு 02.03.2024 ம் தேதி ரூ.40 லட்சம் கடன் கொடுத்துள்ளேன். அந்த தொகை வெற்றி டிரேடர்ஸ்–ல் இருந்த வந்த தொகையா என்றால் அப்படி சொல்லமுடியாது, வெற்றி டிரேடர்ஸ், கவின் EXIM மற்றும் என்னுடைய சொந்த பணம் ஆகியவற்றை கொடுத்தேன்.

8. எதிரியின் மனைவிக்கு 2024–க்கு முன்பு கடன் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, எதிரிக்கு தான் கொடுத்துள்ளேன். இறுதியாக எதிரிக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 2024 ல் எதிரி மரக்காணம் அருகில் நிலம் கிரையம் வாங்கவேண்டும் என்பதற்காக ரூ.55 லட்சம் 05.02.2024 அன்று பணம் கொடுத்தேன். இந்த தொகையை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால், என்னுடைய மில்லில் வைத்து கொடுத்தேன். அந்த தொகை வெற்றி டிரேடர்ஸ்–ல் இருந்த வந்த தொகையா என்றால் வெற்றி டிரேடர்ஸ், கவின் EXIM மற்றும் என்னுடைய சொந்த பணம் ஆகியவற்றை கொடுத்தேன்.

9. இந்த வழக்கின் புகார் யார் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் பெயரில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகாரில் உரிமையாளர் வெற்றி டிரேடர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் பணம் வெற்றி டிரேடர்ஸில் இருந்து எடுக்கப்பட்டதாக புகாரிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் பணத்தை வெற்றி டிரேடர்ஸ், கவின் EXIM ஆகிய நிறுவனங்களில் இருந்து தான் கொடுத்தேன். இதை பற்றி என்னுடைய புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் பணம் கொடுக்கும்போது யாரை சாட்சியாக வைத்து கொடுத்தேன் என்றால் நான் என்னுடைய அலுவலகத்தில் வைத்து தான் கொடுத்தேன், பணம் கொடுப்பதற்கு முன்பு நடுக்குப்பம் சேகரிடம் தொலைப்பேசியில் கேட்டுவிட்டு கொடுத்தேன். நேரில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் என்னுடைய அலுவலக ஊழியர் இருந்தார். ஊழியர்கள் யார் இருந்தார் என்றால் பாலாஜி என்பவர் இருந்தார்.

10. அவர் எந்த ஆண்டில் இருந்து என்னுடைய அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றால் சுமார் 12 ஆண்டுகளாக பணி செய்கிறார். வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. பணம் கொடுக்கும்போது பாலாஜி இருந்தார் என்று புகாரிலோ, அறிவிப்பிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் பணப்பரிவர்த்தனை பற்றி அவருக்கு தெரியாது. யாராவது வந்தால் காபி கொடுப்பார், அவ்வளவு தான் பாலாஜிக்கு தெரியும். எதிரி ரூ.55 லட்சம் கடனாக பணம் வாங்கும்போது என்ன ஆவணம் கொடுத்தார் என்றால் பணம் கொடுத்த அன்று எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. ரூ.55 லட்சம் கொடுக்கும்போது ஏன் எந்த ஆவணமும்

வாங்கிக்கொள்ளவில்லை என்றால் நடுக்குப்பம் சேகர் பணம் கொடுங்கள் நான் எப்போதும் போல் வாங்கி தருகிறேன் என்று சொன்னதாலும், நான் ஏற்கெனவே எதிரியிடம் பணம் கொடுத்து வாங்கியுள்ளதாலும் பணம் கொடுத்தேன்.

11. நடுக்குப்பம் சேகர் சொன்னதால் தான் ஆவணம் எதுவும் வாங்காமல் பணம் கொடுத்தேன் என என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நடுக்குப்பம் சேகர் பற்றி குறுக்கு விசாரணையில் தான் சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த ரூ.55 லட்சம் பணத்தை 25.02.2024 ல் இருந்து 6 மாதத்திற்குள் திருப்பி தருவதாக சொன்னார். அதன் பிறகு நான் கேட்டேன். மேற்கண்ட தொகைக்கு எதிரி 6 மாத காலத்திற்கு எவ்வளவு வட்டி தருவதாக சொன்னார் என்றால் 2 பைசா தருவதாக சொன்னார். ரூ.55 லட்சத்திற்கு 2 பைசா என்றால் மாதம் ரூ.1,10,000/- வட்டி என்றால் சரிதான். எதிரி எத்தனை மாதம் வட்டி செலுத்தியுள்ளார் என்றால் அவர் பணத்தை கொடுக்கும்போது வட்டியுடன் சேர்த்து கொடுத்துவிடுவார். ரூ.55 லட்சத்திற்கு 2 பைசா வட்டியுடன் திருப்பி தருவதாக எதிரி சொன்னார் என அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

12. காசோலை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று என்னுடைய புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் 02.05.2025 தேதியிட்டு காசோலை கொடுத்தார். ரூ.55 லட்சம் ரூபாய்க்கு வட்டியுடன் ஏன் காசோலை கொடுக்கவில்லை என எதிரியிடம் கேட்டேனா என்றால் நான் கேட்டதற்கு அந்த தொழிலில் நஷ்டம் ஆகிவிட்டது, அதனால் வட்டி தரமாட்டேன், அசல் மட்டும் தான் தருவேன் என்று சொன்னார். காசோலையை எப்போது வங்கியில் செலுத்தினேன் என்றால் காசோலை கொடுத்த தேதி தெரியவில்லை, காசோலையை வங்கியில் போடுவதற்கு முன்பு அவரிடம் போன் செய்து கேட்டுக்கொண்டு தான் போட்டேன். எதிரி காசோலையை என் அலுவலகத்திற்கு வந்து கொடுத்தார், அப்போது நடுக்குப்பம் சேகரை நான் என் அலுவலகத்திற்கு வரவழைத்திருந்தேன், அவர் முன்னிலையில் தான் காசோலையை கொடுத்தார். இந்த விவரத்தை என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

13. காசோலையை எப்போது வங்கியில் செலுத்தினேன் என்றால் காசோலை கொடுத்த இரண்டு வாரத்தில் செலுத்தினேன். எதிரிக்கும் எனக்கும் 2017 ம் வருடத்தில் இருந்து பணப்பரிவர்த்தனை இல்லை என்றாலும், 2021 ல் இருந்துதான் பணப்பரிவர்த்தனை உள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு அறிவிப்பு இல்லாமல் எதிரிக்கு வேறு ஏதாவது அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன், தேதி ஞாபகமில்லை. காசோலை இல்லையெனில் கடனுறுதி சீட்டில் கையொப்பம் வாங்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். லதா என்பவர் என்னிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு அவருடைய சொத்தை 01.12.2022 அன்று எனக்கு அடமானம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு முன்பு லதாவிற்கு வேறு ஏதாவது பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

14. 25.02.2021 அன்று ரூ.5 லட்சத்திற்கு எதிரியின் மனைவி லதா மரக்காணத்தில் உள்ள அவருடைய நிலத்தை என்னிடம் அடமானம் வைத்துள்ளாரா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த அடமான ஆவணம்

என்றால் சரிதான். **(அந்த 25.02.2021 தேதியிட்ட அடமான பத்திரம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி அடமான கடனானது 03.08.2021 அன்று 1 பைசா வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டதாக வரவு ரசீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(அந்த வரவு ரசீது எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மீண்டும் அவருக்கு கடன் தேவைப்பட்டதால் எ.ம.சா.ஆ 1ல் கண்ட அதே சொத்தை எனக்கு மீண்டும் 14.06.2022 அன்று அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். **(அந்த 14.06.2022 தேதியிட்ட அடமான ஆவணம் எ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** 14.06.2022 அன்று வாங்கிய கடனை 27.10.2022 அன்று திரும்ப செலுத்தி வரவு ரசீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(அந்த 27.10.2022 தேதியிட்ட வரவு ரசீது எ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

15. அதன் பிறகு எதிரியின் மனைவி 01.12.2022 அன்று ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு அவருடைய வீட்டு மனையை எனக்கு அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி என்னிடம் முதன்முதலில் கடன் வாங்கியபோது தான் நிரப்பப்படாத கடனுறுதி சீட்டு, நிரப்பப்படாத காசோலை மற்றும் வெற்றுத்தாளில் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் கொடுக்கும் ஆவணங்களை பணம் கொடுத்ததும் திருப்பி கொடுத்துவிட்டேன். லதா 3 கடனுறுதி சீட்டுகளின் அடிப்படையில் கடன் வாங்கியதாக நான் மரக்காணத்தை சேர்ந்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம் என்பவரின் மூலம் 3 அறிவிப்புகள் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். எவ்வளவு ரூபாய் தரவேண்டும் என்று மேற்படி அறிவிப்புகளை கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த மூன்று கடனுறுதி சீட்டுகளும் என்னிடம் தான் உள்ளதா என்றால் அது என்னிடம் உள்ளதா அல்லது என்னுடைய வழக்கறிஞரிடம் உள்ளதா என்று எனக்கு ஞாபகமில்லை.

16. அந்த அறிவிப்புகளில் கண்ட தொகை தற்போது வரை பைசல் ஆகவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்புகளுக்கு லதா அனுப்பிய பதில் அறிவிப்பை பார்த்துள்ளேனா என்றால் அதை பார்க்கவில்லை, அதை நடுக்குப்பம் சேகர் தான் கையாளுகிறார். என்னுடைய வழக்கறிஞர் சண்முகசுந்தரம் என்பவர் 09.09.2025 தேதியிட்ட அறிவிப்பை என் சார்பாக எதிரியின் மனைவி லதா என்பவருக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதில் லதா 23 லட்சம் கடன் வாங்கியுள்ளதாகவும், 1 பைசா வட்டி தரவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(அந்த அறிவிப்பு எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த அறிவிப்பிற்கு லதா 01.09.2025 தேதியிட்ட பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றாலும், அதை என் வழக்கறிஞர் கொடுத்துள்ளார் என்றாலும் எனக்கு தெரியவில்லை.

17. மீண்டும் என்னுடைய வழக்கறிஞர் சண்முகசுந்தரம் என்பவர் தேதி குறிப்பிடாமல் ஒரு அறிவிப்பு ஒன்றை லதா என்பவருக்கு 26.12.2025 அன்று ரூ.12 லட்சம் கடன் வாங்கியுள்ளதாக அறிவிப்பு கொடுத்துள்ளார், அது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் என்றாலும், அதில் என்னுடைய கையொப்பம் இல்லை, சேகர் சொல்லி அனுப்பியிருக்கலாம். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மைதான். **(அந்த அறிவிப்பு எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மீண்டும் லதா ரூ.25 லட்சம் கொடுக்கவேண்டும் என்று 09.09.2025 தேதியிட்ட அறிவிப்பை கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு யார் கொடுத்ததாக உள்ளது என்றால் அந்த அறிவிப்பில்

என்னுடைய கையொப்பம் இல்லை, அதை நான் கொடுக்கவில்லை. அந்த அறிவிப்பில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் என் பெயர் உள்ளது ஆனால் அதை நான் கொடுக்கவில்லை.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**